**I Additional District Court, Thoothukudi.**

**<u>O.S.No.127/2021                                        நாள் :  28.11.2025</u>**

**<u>பி.சா.2– திரு. மனோ ராகேஷ்.</u>**

**குறுக்கு விசாரணை :–**

நான் பி.பி.ஏ படித்துள்ளேன். இந்த வழக்கு வாதிகளை யார் என்று எனக்குத் தெரியாது. வா.சா.1– ஐ தெரியாது. பிரதிவாதி என் தகப்பனார். வாதிகளை யார் என்றே எனக்கு தெரியாத நிலையில் வாதிகளிடம் பிரதிவாதி கடனுக்காக வெற்றுப் பத்திரத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்ததாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் வெற்றுத்தாள்களில் நான்கு கையொப்பங்கள் போட்டேன். ஒரு வெற்றுத் முத்திரைத்தாளிலும், மூன்று வெற்றுத் தாள்களிலும் கையொப்பமிட்டேன். அந்த விபரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் வெற்று பத்திரத்தில் கையொப்பமிட்டதாக சொல்லியுள்ளேன். வெற்றுத் தாள்களில் கையொப்பமிட்டதாக நான் சொல்லவில்லை. எத்தனை ரூபாய் முத்திரைத்தாளில் கையொப்பமிட்டேன் என்றால் ஞாபகமில்லை. முத்திரைத்தாளில் பின்பகுதியில் கையொப்பமிட்டேன். பொதுவாக முத்திரைத்தாளில் முன்பக்கத்திலேயே கடன் கொடுப்பவரிடமும், கடன் வாங்குபவரிடமும் கையொப்பம் பெறுவார்கள் என்றால் எனக்குத் தெரியாது. பிரதிவாதி கடன் வாங்கும்போது நானும் உடனிருந்தேன். மார்ச் 2020 ல் பிரதிவாதி கடன் வாங்கினார். தேதி ஞாபகமில்லை. நிரூபண வாக்குமூலத்தில் மார்ச் 2020 ல் பிரதிவாதி கடன் வாங்கியதாக நான் சொல்லவில்லை. இன்றுதான் நீதிமன்றத்தில் முதன்முறையாக அந்த விபரத்தை சொல்கிறேன் என்றால் சரிதான். வாதிகள் வேறு ஊர். நாங்கள் வேறு ஊர். வாதிகள் கடன் கொடுக்கும் நபர்கள் என்பது கோவில்பட்டியைச் சார்ந்த கந்தசாமி என்பவர்

சொல்லி தெரிந்து கொண்டேன். அதை நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றும், பிரதிவாதியும் அதுகுறித்து சாட்சியம் அளிக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். பிரதிவாதி பால் வியாபாரம், மாட்டு வியாபாரம் செய்துவருகிறார். தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தாவா சொத்து குறித்த வில்லங்கச் சான்றிதழ் என்றால் சரிதான். அது **வா.சா.ஆ 18**. அதில் 10.12.2008–ல் பிரதிவாதி ஒரு சுரேஷ் சந்த், ரத்தினசந்த் ஆகியோரிடம் அடமானம் வைத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்தின் அசல் ஆவணங்கள் எங்களிடம் உள்ளதா என்றால் அதை பிரதிவாதியிடம்தான் கேட்க வேண்டும். என் கைபேசி எண் 7708011208 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் வா.சா1 க்கு நான் வாட்ஸ்அப் செயலி மூலமாக அனுப்பிய தகவல்களின் தொகுப்பு என்றால் சரியல்ல. வா.சா.1 க்கு தாவா சொத்து விற்பனை செய்வது சம்பந்தமாக நான் பிரதிவாதியின் அறிவுறுத்தலின்பேரில் அனைத்து அசல் ஆவணங்களையும் படம் எடுத்து வா.சா.1 க்கு வாட்ஸ் அப் செயலி மூலம் அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1–ஐ நான் பார்வையிட்டேன். வா.சா.ஆ 1 ல் நான்கு பேர் சாட்சி கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் எங்கள் ஊர்க்காரர்கள் அல்ல. சாட்சி ராமமூர்த்தியை தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. வாதிகளுக்கு பிரதிவாதி வட்டி கொடுத்தார். எவ்வளவு கொடுத்தார் என்று எனக்குத் தெரியாது. அந்த விபரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. வாதிகள் புகார் கொடுத்து வா.சா.1, பிரதிவாதி மற்றும் நான் காவல்நிலையம் சென்றோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கியதாக சொல்லப்படும் ரூபாய் 3 லட்சம் கடனை திருப்பி செலுத்துவதற்கு நீதிமன்றம் மூலமாகவோ, வழக்கறிஞர் மூலமாகவே

நடவடிக்கை எடுக்கவில்லை. பிரதிவாதி வாங்கிய கடனை திருப்பி செலுத்துவதற்கு பிரதிவாதி தயாராக இருப்பதாக சொல்லவில்லை. வாதிகளிடம் தாவா சொத்தை கிரையம் செய்வதற்காக 05.03.2020 அன்று கிரையம் பேசப்பட்டு வா.சாஆ1 ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ1ன் படி செண்ட் 1 க்கு ரூபாய் 1,17,000/– விலை பேசப்பட்டு அன்றே பிரதிவாதி வாதிகளிடமிருந்து 50,00,001/– முன்பணமாக பெற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. பின்னிட்டு தாவா சொத்தின்மீது அடமானத்தை மீட்பதற்காக 08.08.2020ல் ரூபாய் ஒரு கோடி வாதிகளிடமிருந்து பிரதிவாதி பெற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. ரூபாய் ஒரு கோடி பெற்றுக் கொள்ளும்போதுதான் நானும் உடனிருந்து அதற்கான மேற்குறிப்பில் வா.சா.ஆ1ன் முதல் தாளின் பின்பகுதியில் கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1ல் x குறியீடு போட்டு என்னிடம் கையொப்பம் பெற்றதாக நான் சொல்கிறேன். ஆனால் வா.சா.ஆ1ல் x குறியீடு இல்லை என்றால் சரிதான். கந்தசாமி என்பவரை எங்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அதனால் கந்தசாமி என்ற நபரிடம்தான் பிரதிவாதி கடன் வாங்கினார் என்றால் சரிதான். அந்த சங்கதியை என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. பிரதிவாதியின் நிரூபண வாக்குமூலத்திலும், எதிர் வழக்குரையிலும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. கந்தசாமியின் தகப்பனார் பெயர், விலாசம் எனக்குத் தெரியாது. கந்தசாமி என்ற கற்பனை கதாப்பாத்திரத்தை உருவாக்கி நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை இதுகுறித்து விசாரித்தால் கந்தசாமியைப் பற்றி தெரியவரும் என்றால் சரிதான். சரியான பிரதிபலனைப் பெற்றுக் கொண்டுதான் பிரதிவாதி வா.சா.ஆ1ல் கையொப்பமிட்டுக் கொடுத்தார் என்றும், தற்போது கிரையம்

முடித்து கொடுத்துவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதி கடன் வாங்கியதாக பிரதிவாதி நடத்தும் பொய்யான எதிர் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2025.11.28 17:58:46 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.